
நேதாஜி சுபாஷ் - கம்யூனிஸ்ட்கள்

உறவும் உரசலும்



சிறு வெளியீடு ஜனவரி 2020

ஆசிரியரின் பிற நூல்கள்

1. மார்க்சியத் தடங்கள்
2. ரோசாலக்ஸம்பர்க்
3. போராளிகளின் குரல்
4. பகவத்கீதை பன்முகக் குரல்கள்
5. Trade Justice in Telecom
6. Selected Ideas of O.P Gupta
7. ஹெகல் துவங்கி..
8. கார்க்கியின் அரசியல்வெளி
9. நவீன சிந்தனையின் இந்தியப் பன்முகங்கள்
10. காந்தியைக் கண்டுணர்தல்

சிறு வெளியீடுகள்

1. ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா
2. சிகாகோ மேதின தியாகிகள்
3. பகுனின் போராட்ட வாழ்வும் அனார்க்கிசமும்
4. விடுதலைக்கு முன்னர் எம் என் ராய்
5. பிரடரிக் எங்கெல்ஸ் நட்பின் சிகரம்

நேதாஜி சுபாஷ் - கம்யூனிஸ்ட்கள்

உறவும் உரசலும்

இந்திய தேசிய காங்கிரசில் வலது- இடது என பிரிவுகளின் மோதல் 1930களிலிருந்து பெருமளவு வெளித்தெரிய துவங்கியது. காங்கிரஸ் சோசலிஸ்ட்கள், கம்யூனிஸ்ட்கள், ராயிஸ்ட்கள், போஸிஸ்ட்கள் என நான்கு இடது பிரிவுகள் இணைந்து காங்கிரசின் பலம் மிகுந்த வலதை எதிர்த்த வரலாறும் நடந்துள்ளது. தங்களுக்குள் கடுமையாக மோதிக்கொண்டு ஒருவரை ஒருவர் மிகமோசமான வசைகளால் தாக்கிக்கொண்ட வரலாறும் நடந்தேறியது.

இங்கு நேதாஜி- கம்யூனிஸ்ட்கள் மத்தியிலான உறவும் உரசலும் எடுத்துவைக்கப்படுகிறது. வரலாற்றை புரிதல் என்கிற அளவில் இக்கட்டுரை புதியவர்களுக்கு பயனுள்ளதாக அமையலாம். காலவோட்டத்தில் பழையவகைப்பட்ட புரிதல்கள் வழக்கு ஒழிந்து போவதையும் தங்கள் பழைய நிலைப்பாட்டில் வளர்ந்து வருகிற இயக்கங்கள் நிற்க முடிவதில்லை என்பதையும் இவ்வரலாறு நமக்கு சுட்டிக்காட்டலாம்

I

இந்தியா விடுதலை என்பது 2 சத உயர்தட்டிற்காக அல்ல- 98 சத உழைக்கும் மக்களுக்கானது- ருஷ்யாவின் போல்ஷ்விசம் வருவதற்கான சூழல்தான் இந்தியாவிலும் நிலவுகிறது என கயா காங்கிரஸ் மாநாட்டில் 1921ல் சி ஆர் தாஸ் அறிவித்தார்-. 4 வது காங்கிரசில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் தலைமையும் இந்திய விடுதலைக்கு துணை நிற்போம் என்றது. வைஸ்ராய் முற்றிவரும் நிலைமைகளை விளக்கி இங்கிலாந்தில் செயலருக்கு செய்தி அனுப்பினார். தீவிரவாதம் பேசக்கூடியவர்கள் சி ஆர் தாஸ் உட்பட, மீடியாக்கள் சிலவும் கூட எம் என் ராயின் செல்வாக்கில் இருப்பதாக தெரிகிறது என்பது அனுப்பப்பட்ட செய்தி.

கம்யூனிஸ்ட் அகிலமும் சி ஆர் தாஸ், சுபாஷ் ஆகியோரும் டாங்கேவுடன் மாநாட்டிற்கு வரவேண்டும் என்றது. இப்படி அழைப்பு கடிதம் ஒன்று எம் என் ராய் மூலம் வந்ததை 1923ல் உளவுத்துறை எஸ்பி ஒருவர் உறுதிப்படுத்தி அரசாங்கத்திற்கு தெரிவித்தார். டாங்கே நடத்திவந்த சோசலிஸ்ட் பத்திரிகையில் காங்கிரசிற்குள் ISLP Indian Socialist Labour Party

என புரட்சிகர எண்ணம் கொண்டவர்கள் இணைந்து அமைப்பு வைத்துக்கொள்ளலாம் என அவர் எழுதியிருந்தார். சுபாஷிற்கு அபானிமுகர்ஜி, நளினிகுப்தா போன்ற ஆரம்பகால கம்யூனிஸ்ட்களுடன் தொடர்பு இருந்தது.

சுபாஷ் 1924-27ல் சிறையில் இருந்தார். வெளிவந்தவுடன் மதராஸ் காங்கிரஸ் மாநாட்டில் 1927ல் பங்கேற்றார். பூர்ணவிடுதலை- டொமீனியன் அந்தஸ்து என்பதை சுற்றி விவாதம் இருந்தது. பங்கேற்ற கம்யூனிஸ்ட் சார்பாளர்கள் பூர்ணவிடுதலை என்றனர். அவர்கள் 1921லேயே மெளலானா ஹஸ்ரட் மொகானி மூலம் இம்முழக்கத்தை எழுப்பினர். அப்போது அவர்களுக்கு 9 வாக்குகள் மட்டுமே கிடைத்தது. 1922ல் கயா மாநாட்டில் சிங்காரவேலர் எழுப்பினார். அங்கும் ஏற்பில்லை. ஆனால் சென்னையில் இம்முழக்கம் நேரு- சுபாசின் ஆதரவைப்பெற்றது. ரயில்வே தொழிற்சங்கத் தலைவராகவும் பம்பாயிலிருந்து செயல்பட்ட கம்யூனிஸ்டாகவும் இருந்த ஜோக்லேகர் தீர்மானத்தை முன்மொழிந்தார் This congress declares the goal of Indian People to have complete national Independence என்பது தீர்மானத்தின் சாரம். சார்பாளர்களால் இத்தீர்மானம் ஏற்கப்பட்டது.

இடது தேசியவாதிகளும் கம்யூனிஸ்ட்களும் சேர்ந்து 1928ல் Independence for India League என்கிற அமைப்பை துவக்கினர். 1928 கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டிலும் பூர்ண சுதந்திரம் என்பதை சுபாஷ் எழுப்பினார். காந்தியின் தீர்மானத்திற்கு திருத்தமாக சேர்க்கவேண்டும் என சுபாஷ் தனது கருத்தை முன்மொழிந்தார். நேருவின் ஆதரவும் இருந்தது.

This Congress adheres to the decision of the Madras Congress declaring complete Independence to be the goal of the Indian People and is of the opinion that there can be no true freedom till the British connection is severed" என்பது திருத்தமாக கொடுக்கப்பட்டது. காந்தி ஏற்கவில்லை. சார்பாளர்கள் குறைந்த வாக்கெடுப்பு வித்தியாசத்தில் இதை தோற்கடித்தனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரபூர்வமாக செயல்பாடு என்பது இல்லாதிருந்த நிலையிலும் 50000 பேர்கள் பங்கேற்ற தொழிலாளர் விவசாயி பேரணி ஒன்றை மாநாட்டு பந்தல் நோக்கி நடத்தியது. தனியாக பூர்ண சுதந்திரம் என தீர்மானம் இயற்றியது. ஆறாவது அகிலத்தின் வழிகாட்டுதலையடுத்து 1928ல் workers peasant parties' கலைக்கப்பட வேண்டும் என்ற பேச்சும் வந்தது. ஆனால் கல்கத்தாவில் கூடிய

தோழர்கள் காங்கிரசிற்குள் பிரிவாக செயல்படலாம் என முடிவெடுத்தனர்.

1928ன் இறுதியில் லெனின் வழிகாட்டலுக்கு மாறான பூர்ஷ்வா தேசியவாதம் குறித்த எதிர்மறை பார்வையை அகிலத்தின் ஆறாவது மாநாடு எடுத்தது. இதைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட்களால் காந்தி மட்டுமல்லாது போஷ், நேரு போன்றவர்களும் தாக்கப்பட்டனர். உழைக்கும் மக்களுக்கு எதிரான 'பூர்ஷ்வா நலன் காவலர்கள்' என அவர்கள் மீதான முத்திரை குத்தப்பட்டது. இதன் வெளிப்பாடாக தேஷ்பாண்டே, ரணதிவே தலைமையில் AITUC லிருந்து வெளியேறி கம்யூனிஸ்ட் தலைவர்கள் சிவப்பு தொழிற்சங்க காங்கிரஸ் (Red Trade Union congress) அமைத்தனர்.

கம்யூனிசம் பரவிவருவது கவலைதருவதாக இருக்கிறது என வைஸ்ராய் இர்வின் 1929ல் அறிவித்தார். மறுபக்கம் எம் என் ராய் நாடு தீவிரமாக திரண்டுவருகிறது என்பதை ஏகாதிபத்தியம் உணர்ந்துகொண்டுள்ளது என எழுதினார். 1929 மார்ச்சில் 17-19ல் பம்பாயில் கூடிய சி பி அய் மத்திய கமிட்டி ஏகாதிபத்திய எதிர்ப்பு அணி என அரசியல் தீர்மானம் இயற்றியது. மார்ச் 20 அன்று முக்கிய 31 தொழிலாளர் தலைவர்கள் மீரத் சதிவழக்கு போடப்பட்டு கைது செய்யப்பட்டனர். சுபாஷ் மீதும் அரசாங்கத்திற்கு கண் இருந்தது. அவர் உடல்நிலை கருதி வெளிநாடு செல்லலாம்- உள்நாட்டில் சுதந்திரமாக உலாவக்கூடாது என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

சிறையிலிருந்த டாங்கே, பி சி ஜோஷி போன்றவர்கள் ஒத்துழையாமை இயக்கங்களில் மக்களுடன் சேர்ந்து பங்கேற்கவேண்டும் என விழைந்தனர். மோனி சிங், அப்துர் ரசாக் கான், பங்கிம் முகர்ஜி போன்ற கம்யூனிஸ்ட்கள் அலிப்பூர் சிறையில் சுபாஷுடன் விவாதித்தனர். தங்களின் அன்பை தோழமையை வெளிப்படுத்தினர். மீரத் வழக்கில் பாதிக்கப்பட்ட கம்யூனிஸ்ட்களுடன் தேசிய இயக்கம் ஆதரவாக இருந்தது.

சி பி அய்யின் Draft platformof Action 1930 அறிக்கை காந்தி, நேரு, சுபாஷ் ஆகிய அனைவருமே பூர்ஷ்வா வர்க்கத்தின் ஏஜெண்ட்கள்- தொழிலாளி வர்க்க அடிப்படை நலன்களுக்கு விரோதமானவர்கள் என்று குறிப்பிட்டது.

1931ல் AITUC தலைவராக சுபாஷும் செயலராக கம்யூனிஸ்ட் தலைவரான எஸ் வி தேஷ்பாண்டேயும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். என் எம் ஜோஷி அணிக்கு எதிராக தேசிய இடதுகளும் கம்யூனிஸ்ட்களும் சேர்ந்து நின்றதால் இவ்வாய்ப்பு உருவானது என சுபாஷ் இதை மதிப்பிட்டார்.

பிப்ரவரி 1933ல் சுபாஷ் அய்ரோப்பிய பயணம் மேற்கொண்டார். ஜூன் 1933ல் அவர் லண்டலின் இருந்தபோது காந்தி- இர்வின் உடன்பாட்டை விமர்சித்தார். இந்தியாவில் சோசலிஸ்ட் கட்சி ஒன்றை அமைக்கவேண்டிய அவசியம் இருப்பதாக பேசினார். ஆனால் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கம் போஸ் குறித்து தன் சந்தேக பார்வையை வெளியிட்டது.

The so called new policy of Bose does not help the struggle for Independence.. it only leads to a further enslavement of the toiling masses என்றது. காந்தியுடனான வேறுபாடுகளை தனக்கு சாதகமாக தீர்க்க போஸ் செய்யும் முயற்சியாகவே அதை அவர்கள் புரிந்துகொண்டனர்.

நேதாஜியின் புகழ்வாய்ந்த The Indian Struggle 1935ல் வெளியானது. பாசிசம் குறித்த அவரது புகழ்ச்சி கடும் விமர்சனத்திற்கு உள்ளானது. நேரு தொடர்ச்சியாக பாசிச எதிர்ப்பு நிலைப்பாட்டில் இருந்தார். நேரு கம்யூனிசம் பக்கமே நிற்கவேண்டும் என்றார். There is no middle road between Facisim and communism. One has to choose between the two and I choose the Communist Ideal என்றார் நேரு. ஆனால் போஸ் அவர்களுக்கு நேருவுடன் இதில் உடன்படமுடியவில்லை.

போஸிற்கு கம்யூனிசம்- பாசிசம் இரண்டின் இணைவு உலகில் சாத்தியமாகும் என்ற கருத்து இருந்தது (The next phase in world history will produce a synthesis between Communism and Facism). அதேநேரத்தில் தொடர்ந்த விவாதங்களுக்கும், கிடைத்த கூடுதல் தகவல்களுக்கும் பின்னர் தன் கருத்தை அவர் மாற்றிக்கொள்ளவும் செய்தார். லண்டனின் கம்யூனிஸ்ட் தலைவர்கள் ரஜினி பாமிதத் மற்றும் பென்பிராட்லி சந்திப்பு- உரையாடல்களுக்குப் பின்னர் தனது பாசிசம் குறித்த முந்திய மதிப்பீடுகள் முற்றிலும் தவறு என பகிரங்கமாக அறிவித்தார்.

புத்தகம் எழுதிய மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் ஏற்பட்டுள்ள அரசியல் மாறுதல்களை பார்த்து நான் மாற்றங்களை ஏற்றுள்ளேன். விடுதலை

இந்தியாவின் பயணம் சோசலிச திசைவழிதான் என அவர் சொல்லத் தவறவில்லை. பாசிசம் பற்றி 1935ல் பேசியபோது அது தீவிர தேசியவாத தன்மைகொண்டது எனக்கருதினேன்.அப்போது அதன் ஏகாதிபத்திய தன்மை தெரியவில்லை என்ற விளக்கம் தந்தார் நேதாஜி.

1936ல் சி பி அய்யும் தனது அரசியலை சரிசெய்துகொண்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் முன்னணி என்றது. வங்கம் திரும்பிய போஸ் அவர்கள் காங்கிரஸ் மாகாண கமிட்டி தலைமை பொறுப்பை எடுத்தபோது அதில் கம்யூனிஸ்ட்களான பங்கிம் முகர்ஜி, பன்ச் கோபால் பாதுரி ஆகியவர்களை துணைத்தலைவர் துணைச்செயலர் பொறுப்புகளில் அமர்த்தினார்.

1939ல் அவர் பார்வார்ட் பிளாக் உருவாக்கியவுடனேயே இடது கூட்டமைப்பு ஜுன் 1939ல் அமைய உதவினார். திரிபுரி காங்கிரஸ் மாநாட்டில் இடதுகளின் ஒற்றுமை காரணமாக காங்கிரஸ் தலைவராகவும் சுபாஷால் வரமுடிந்தது. காந்தியின் ஆதரவு பட்டாபிசீதாராமையாவிற்கு எனத்தெரிந்தும் அவர் சுபாஷால் தோற்கடிக்கப்பட்டார். காங்கிரசிற்குள் 4 இடதுகட்சிகளின் (CSP, CPI, Royists, Subhasites) Left Consolidation Committee அமைக்கப்பட்டு செயல்பாடு துவங்கியது.

கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலர் பி சி ஜோஷி தங்கள் National Front பத்திரிகையில் சுபாஷிற்கு வாக்களிப்போம் என எழுதினார். சுபாஷின் வெற்றியை தொண்டர்களின் வெற்றி என கணித்தார். தொடர்ந்து நேதாஜி மீண்டும் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு விடுதலை இயக்கத்தை முன்னெடுக்கவேண்டும் எனவும் சி பி அய் எழுதியது. ஆனால் படேல் உள்ளிட்டவர்கள் தந்த நெருக்கடியால் சுபாஷ் தலைமை நீடிக்கமுடியவில்லை. அவர் காங்கிரசிலிருந்தே விலகி பார்வார்ட் பிளாக் துவங்குமளவு எதிர்வினை ஆற்றவேண்டியதானது.

சுபாஷ் தலைமை பொறுப்பேற்றாலும் அவரால் செயற்குழுவில் போதுமான இடதுசாரிகளை கொணரமுடியவில்லை. அதற்கு அவர் முயற்சிக்கவும் இல்லை. தனது பார்வார்ட் பிளாக் ஆரம்பித்தவுடன் அனைத்து இடதுசாரிகளும் தன்னுடன் இருக்கவேண்டும் என அவர் விழைந்தார். ஆனால் ராயிஸ்ட்கள், சி பி அய், காங்கிரஸ் சோசலிஸ்ட்கள் அவ்வாறு நேதாஜி விரும்பியதை செய்ய முன்வரவில்லை.

காங்கிரசின் வலதுபிரிவின் செயல்களை சி பி அய் விமர்சித்தாலும் காங்கிரசில் உடைவு ஏகாதிபத்திய எதிர்ப்பில் பலவீனத்தை உருவாக்கும் எனவும் விமர்சித்தனர். The interests of the anti imperilaist movement demanded not the exclusive leadership of one wing; but a united leadership என்ற கருத்தை தெரிவித்து வந்தனர். சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கமும் இந்த நிலைப்பாட்டை வற்புறுத்தியது. காங்கிரஸ் தலைமையில் ஒன்றுபட்டு அனைத்து தேச சக்திகளும் (The question of paramount importance of India, in our view, is the unity of all national forces under the leadership of the Indian National congress) என்றனர்.

சி பி அய் சுபாஷ் மத்தியில் சில உரசல்கள் இருந்தாலும் வங்கத்தில் சேர்ந்து பணியாற்றுவது தொடர்ந்தது. பார்வார்ட் பிளாக் பத்திரிகை ஆசிரியர் குழுவில் கோபால் ஹால்தார், பினாய் கோஷ், உபாத்யாய் போன்ற கம்யூனிஸ்ட்கள் தொடர்ந்தனர். அதேபோல் சி பி அய் தனது நேஷனல் பிரண்ட் பத்திரிகையில் சுபாஷின் இரு கட்டுரைகளை வெளியிடவும் செய்தது. அதில் அவர் இடதுசாரிகளின் ஒற்றுமைக்கு இடைவிடாத முயற்சிகளை சி பி அய் செய்துவருவதை பாராட்டி இருந்தார்.

காங்கிரஸ் வந்தாலும் வராவிடினும் யுத்த சூழலை பயன்படுத்திக்கொண்டு மக்கள் போராட்டங்களை தீவிரப்படுத்தவேண்டும் என சுபாஷ் சொல்லிவந்தார். சி பி அய்யும் தனது அக்டோபர் 1939 பொலிட் ப்யூரோ கூட்டத்தில் The task of the Indian people was the revoultionary utilisation of the war crisis for the achievement of National Freedom... the capture of power is an immediately realisable goal என முடிவெடுத்தது. அதே நேரத்தில் ‘காங்கிரஸ் உடன் அல்லாமலும்’ என்கிற முடிவை அது அறிவிக்கவில்லை. பார்வார்ட் பிளாக் அதை செய்தது. பிரிட்டிஷ் அரசாங்கம் 1940 மார்ச்சில் கம்யூனிஸ்ட் தலைவர்களை கைது செய்வது என நடவடிக்கைகளில் இறங்கியது.

நேதாஜிக்கு சோவியத் சென்று அவர்களின் உதவியைப்பெற இயலுமா என்கிற எண்ணமும் ஓடியது. அவர் பெஷாவர் சதிவழக்கில் சிக்கவைக்கப்பட்ட மியான் அக்பர் மற்றும் பஞ்சாபின் கம்யூனிஸ்ட் அச்சார் சிங் ஆகியவர்களுடன் தொடர்பு கொண்டார். ஆப்கான் வழியே அவரை சோவியத் அனுப்ப முயற்சி எடுக்க அத்தோழர்களும் உறுதி அளித்தனர். முன்னோட்டமாக அனுப்பப்பட்ட தோழர் ஜூலை 1940ல் ஆப்கான் சோவியத் எல்கைக்கு சென்றார். உடன் சென்ற ராம் கிஷன் என்பார் ஆற்று வெள்ளத்தில் சிக்கி மூழ்கி மறைந்தார்.

சுபாஷ் போஸ் உள்நாட்டு அர்சியல் நிலைகளை கவனித்து 1941ல் வெளியேறுவது என்கிற ஏற்பாடு இருந்தது. அவருடன் பதான் கம்யூனிஸ்ட் பகத்ராம் தல்வார் செல்வது என்பது ஏற்பாடு. சில தனிநபர்களாக இருந்தாலும் கம்யூனிஸ்ட்கள் நேதாஜியின் செல்கைக்கு உதவியை ஏற்பாடுகளை செய்தனர் என சொல்லமுடியும்.

இத்தாலி சேர்ந்த அதிகாரி ஒருவர் தனது நினைவு குறிப்பாக ரகமத்கான் என்பாருடன் இந்திய கம்யூனிஸ்ட்கள் உதவியால் நேதாஜி ஆப்கான் வந்தார் என எச் வி காமத்திடம் ஒரு சந்திப்பில் தெரிவித்தார். இந்த ரகமத்கான் என்பவர் பகத்ராம்தான்.

சோவியத் நுழைய ரஜினி பாமிதத் உள்ளிட்ட கம்யூனிஸ்ட் தலைவர்களை சுபாஷ் அணுகினார் என எல். கார்டன் தனது 'Brothers Against Raj' புத்தகத்தில் செய்தி தருகிறார். நேதாஜி சோவியத் நுழைவிற்கு காத்திருக்கவேண்டியிருந்தது. மார்ச்15 1941ல் கார் மற்றும் ரயில் வழியே மாஸ்கோ சென்ற அவர் அங்கிருந்து விமானம் மூலம் பெர்லின் சென்றார்.

எதிரிக்கு எதிரி நண்பன் என்ற நிலைப்பாட்டை நேதாஜி எடுத்தார். கம்யூனிஸ்ட் கட்சி பாசிச சக்திகளின் முறியடிப்பு என்கிற நிலைப்பாட்டை எடுப்பது அவசியம் என அதற்காக போராடிவந்தது. ஹிட்லருக்கு நேதாஜியின் இந்திய படைப்பிரிவு மீது மரியாதை ஏதும் இருந்திருக்கவில்லை. அவர்களால் மூட்டைப்பூச்சியைக் கூட நசுக்க முடியாது என ஹிட்லர் கேலி பேசினார். அவர்களை இங்கிலீஸ்காரர்களுக்கு எதிராக நிறுத்தமுடியாது என்றார் ஹிட்லர். சுபாஷ் அங்கு உளவுத்துறையால் கவனிக்கப்பட்டும் வந்தார்.

இந்தோசீனா பகுதிகளில் விடுதலை இயக்கத்தை முன்நின்று நடத்திக்கொண்டிருந்த ஹோசிமின் பிரஞ்சு மற்றும் ஜப்பான் எதிர்த்து போராடிக்கொண்டிருந்தார். நேதாஜிக்கும் அமெரிக்கா- இங்கிலாந்தின் நலன்கள் வேறு- ருஷ்யாவின் நலன்கள் வேறு என்ற புரிதல் இல்லாமல் இல்லை. சோவியத்திடம் ஜெர்மனின் தோல்வி உலக யுத்தத்தில் ஆச்சர்யம் உருவாக்கலாம் என்ற கருத்தும் அவரிடம் இருந்தது.

சுபாஷ் மற்றும் கம்யூனிஸ்ட்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பில் கருணை மனுக்கள் வேண்டுகோள்கள் பயனளிக்காது என்ற தரப்பாராக இருந்தனர். இரண்டாம் உலகப்போர் காலத்தில் அதுவும் குறிப்பாக சோவியத்தின் பாத்திரம் பொறுத்து கம்யூனிஸ்ட்கள் மக்கள் யுத்தம் நிலைப்பாட்டை எடுத்தனர். நேதாஜி பாசிச சக்திகள் பக்கம் போய் நிற்கிறார் என்ற எண்ணம் இங்குள்ள தேசபக்த சக்திகளுக்கு வலுவாக இருந்தது.

II

நேதாஜி இந்திய போராட்டம் என்கிற அவரது Indian Struggle ஆக்கத்தில் பம்பாயில் டாங்கே தலைமையில் உருவான சோசலிஸ்ட் குழு குறித்தும் அவர் கான்பூர் மற்றும் மீரத் சதிவழக்கில் பழிவாங்கப்பட்டதையும் குறிப்பிடுகிறார். இவர்கள்தான் முதல் கம்யூனிஸ்ட் குழு என்கிறார். அவர்களுக்கு விதல்பாய் படேல் மட்டுமே துணையாக நின்றார் எனவும் நேதாஜி பதிவு செல்கிறது.

வேறு ஒரு பதிவில் கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப்பட்ட சிறு கட்சியாக இருந்தது. சி எஸ் பிக்கு மாற்றுத்தலைமையை உருவாக்கும் வரலாற்று பாத்திரம் இருந்தது என நேதாஜி மதிப்பிட்டிருந்தார். " The CPI a small group which had been declared illegal by the British Govt, instructed its members to join the CSP, in order to push forward its own organisation and objective. It did succeed in extending its influence among a section of the students and factory workers. Later on, the CPI took the name of National Front in order to function publicly. The CSP had the historic opportunity to throw up an alternative leadership, in place of Gandhian leadership which had monopolised the political field since 1920 " (Indian Struggle 2 35-42)

காந்தியத்தில் அதிருப்தியுற்ற குழுவினர் பம்பாயில் கம்யூனிஸ்ட்களாக மாறினர்.. ஆனால் கல்கத்தாவில் அங்குள்ள நிலைக்கேற்ப காந்திய எதிர்ப்பு அமைந்தது. ருஷ்யாவில் லெனின், ஜெர்மனியில் ஹிட்லர், இத்தாலியில் முசோலினி மக்கள் உளவியலை சாதகமாக்கிக்கொண்டது போலவே மகாத்மா காந்தியும் இந்தியாவில் செய்தார் என்கிற கருத்து நேதாஜியிடம் இருந்தது. Exploiting weak traits என்கிற பதத்தை நேதாஜி பயன்படுத்துகிறார்.

கம்யூனிஸ்ட்களின் செயல்பாடுகள் 1927-28 களில் அதிகரிக்கத்துவங்கின. இதனால் தேசிய சக்திகள் எனப்படுவோர் தங்கள் பலவீனத்தை உணர்ந்தனர். அதுமட்டுமல்ல தொழிலாளர் போராட்டங்களும் அதிகரித்தன என எழுதினார் நேதாஜி. சோவியத்திற்கும் பிரிட்டிஷாருக்கும் உள்ள உறவுகளைப் பொறுத்து நிலைமைகள் மாறின எனவும் அவர் சொல்கிறார்.

பம்பாய் பஞ்சாலை தொழிலாளர் போராட்டம் குறித்து சிறப்பாக பாராட்டினார் நேதாஜி. மிகவும் கட்டுப்பாடான கம்யூனிஸ்ட்கள் தலைமையில் நடந்தது எனவும் அவர் குறிப்பிடுகிறார். ஆரம்பத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு லீக் கம்யூனிஸ்ட் அல்லாதவர் இயக்கம் என சொல்லப்பட்டாலும் அதில் கம்யூனிஸ்ட்கள் செல்வாக்கு பெருகியது.

தொழிற்சங்க காங்கிரசின் தலைவர்களாக இருந்த என் எம் ஜோஷியையும் சமன்லாலையும் வலது பிரிவினர் என முத்திரையிட்டார் நேதாஜி. விட்லி கமிஷன் வந்தபோது அதை பகிஷ்கரிக்கவேண்டும் என்ற குரலை இடதுசாரிகள் எழுப்பினர். அப்போது அதை பயன்படுத்திக்கொள்ளவேண்டும் எனக்குரல்கள் வந்தபோது ஜோஷி- சமன்லால் ஒழிக என முழக்கங்கள் வந்ததாக நேதாஜி தெரிவிக்கிறார். அன்றிருந்த சூழலில் செல்வாக்குடன் தொழிற்சங்கத்தில் இருந்த ஜோஷி காயமுற்றார். என் எம் ஜோஷி வெளியேறி தனி அமைப்பை துவங்கினார் என்பதையும் நேதாஜி குறிப்பிடுகிறார்.

அய்ரோப்பாவில் தான் தங்கியிருந்த காலத்தில் உளவுத்துறையால் கவனிக்கப்பட்டதாக நேதாஜி விவரிக்கிறார். பாசிச நாட்டில் என்னை கம்யூனிஸ்ட் என முத்திரை குத்துவர். சோசலிச நாடுகள் பாசிசவாதி என சொல்வர். காங்கிரஸ் சோசலிச கட்சி முதலில் தேர்தலில் பங்கேற்பு என்பதையே வேண்டாம் என நினைத்தது . பின்னர் பங்கேற்கலாம்- அமைச்சரவையில் வேண்டாம் என்ற நிலைப்பட்டை எடுத்தது. காங்கிரஸ் சோசலிஸ்ட்கள் அப்போது எந்தவித புரட்சிகர திட்டமும் இல்லாமல் இருந்தனர் என்ற விமர்சனத்தை நேதாஜியிடம் பார்க்க முடிகிறது. அதே நேரத்தில் இடதுகளின் ஒருங்கிணைப்பு என்பதற்கு சி எஸ் பி துணையாக நின்றது என்பதை நேதாஜி ஏற்கிறார்.

அனைத்திந்திய கிசான் இயக்கம், மாணவர் இயக்கம் ஏற்படுத்தப்பட்டதையும் அவர் வரவேற்பவராக இருந்தார். 'காந்தி விங்' என்பதுடனோ, நேரிடையாக இடதுகளுடனோ இல்லாமல் தனியாக நேரு இருந்தார். அதே நேரத்தில் அவர் 1937-39களில் காந்தியுடன் நெருங்கி சென்றார். இதன் பலனாக ஜனவரி 1942ல் நேருவை வாரிசு என காந்தி அறிவித்தார் என நேதாஜி சுட்டிக் காட்டுகிறார். ஆனாலும் கிரிப்ஸ் தூதுக்குழு காலத்தில் அவரால் காந்தியுடன் முழுமையாக

நிற்கமுடியவில்லை என்கிறார் நேதாஜி. 'காந்தி விங்' நேருவை ஏற்க தயாராக இல்லை என்பது வெளிப்படையாக தெரிந்ததாகவும் நேதாஜி பதிவு செல்கிறது.

காந்தியர்களுடன் தான் நடத்திய போராட்டத்தின்போது சோசலிஸ்ட்கள் முழுமையாக தன்னுடன் நிற்கவில்லை என்கிற வருத்தம் நேதாஜியிடம் இருந்தது - Organised Disciplined Left wing party in Congress காலத்தின் கட்டாயம் என அவர் பேசிவந்தார். 1939ல் அவர் பார்வார்ட் பிளாக் துவங்கினார். இதில் நேருவின் நிலைப்பாட்டை தெளிவுற கண்டதாக நேதாஜி தெரிவிக்கிறார். அவரால் இரு குதிரை சவாரி செய்யமுடியாமல் போனது. அவர் வலதுபக்கம் சாயத்துவங்கினார் என்ற குற்றச்சாட்டை நேதாஜி வைக்கலானார். நேருவிற்கு நேதாஜியின் நடவடிக்கைகள் காங்கிரசை பலவீனப்படுத்தும் என்ற கருத்து இருந்தது. அதை நேதாஜியிடமும் கல்கத்தா சந்திப்பில் தெரிவித்தார். ஒற்றுமை என்பது செயலுக்குத்தானே தவிர செயல்படாமைக்கு அல்ல என நேருவின் அறிவுரையை புறக்கணித்தார் நேதாஜி.

1934-38 ஆண்டுகளில் நேரு, எம் என் ராய், சோசலிஸ்ட்கள், கம்யூனிஸ்ட்கள் என எவராலும் மாற்றுத்தலைமை தரமுடியாமல் போனதை நேதாஜி குறிப்பிட்டு சொல்கிறார். கம்யூனிஸ்ட்கள் பற்றி அவர் கீழ்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

“ When CSP failed to rise to the occassion, there was an opportunity for the CPI- functioning in the name of Natioanl front to come to the forefront. But CP, besides numerically small, lacked a proper national perspective and could not develop as the organ of natioanl struggle. Not having its roots in the soil, this party very often erred in estimating a particular situation or crisis and consequently adopted a wrong policy." மாற்றுத்தலைமைக்கு வாய்ப்பு பெற்ற சி பி அய் கம்யூனிஸ்ட் கட்சி மக்களிடம் வேர்பிடித்திராத தேசியபார்வையற்ற சிறு எண்ணிக்கை கொண்ட தேசமளவிலான போராட்ட கருவியாக வளரமுடியாத கட்சியாக இருந்தது என மதிப்பிட்டார் நேதாஜி.

எவ்வளவு எடுத்துரைத்தும் இடது செல்வாக்கிற்கான விரிவான மேடையை பலப்படுத்த சோசலிசஸ்ட்கள் தவறினர் என்பதும் அவரது விமர்சனமாக இருந்தது. சோசலிஸ்ட்கள் சோசலிசம் பற்றி நிரம்ப பேசினர் என நேதாஜி விமர்சித்தார்.

நேதாஜி மூன்று வழிகளில் இடதுசாரிகளின் ஒருங்கிணைப்பை பலப்படுத்தலாம் என்றார். அனைத்து இடதுகளும் சேர்ந்து ஒரே கட்சி வடிவில் செயல்படுவது, ஒரு 'பிளாக்' உருவாக்கி அதில் அனைவரும் இடம்பெற்று செயல்படுதல் (பார்வார்ட் பிளாக்), பார்வார்ட் பிளாக்- ராயிஸ்ட்- காங்கிரஸ் சோசலிஸ்ட்- கம்யூனிஸ்ட்களின் ஆகிய இடது கட்சிகளின் Left Consolidation Committee மூலம் இணைந்து செயல்படுவது என்பதே அவர் முன்வைத்த ஆலோசனைகள். பார்வார்ட் பிளாக்கிற்குள் வர மற்றவர் இசையாததால் 'எல் சி சி' உருவாக்கப்பட்டது. அவரவர் தங்கள் அமைப்பிற்கு சாதகமாக அதை மாற்ற முனைந்ததால் அதில் முன்னேற்றம் காணமுடியவில்லை என தன் ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார் நேதாஜி.

அதே போல் இவ்வமைப்புகளிடையே எவர் உண்மையான இடதுசாரி என்ற விவாதம் எழாமல் இருந்திருக்க முடியாது. இந்தக் கேள்வியையும் எழுப்பி நேதாஜி பதில் தருகிறார். சமரமற்ற விடுதலை போராட்டம்- நம்பகமான ஏகாதிபத்திய எதிர்ப்பு- நீர்த்துப்போகாத சுதந்திரம் என்பனவே தலையாயன. விடுதலைக்குப்பின்னர் எனில் இடது இயம் என்றால் சோசலிசம்தான். அரசியல் விடுதலைக்கு முன்னர் சோசலிச கட்டுமானம் என்பது முதிராதது என்பதை உணரவேண்டும் என்றார் நேதாஜி.

" In the present political phase of Indian life, Lefitism means anti- imperialism. A genuine anti imperialist is one who believes in undiluted independence (not Mahatma Gandhi's substance of independence) as the political objective and in uncompromising national struggle as the means for attaining it. After the attainment of political independence, Leftism means Socialism... Socialism or Socialist reconstruction before achieving our political emancipation is altogether premature"

'Forward Block- Its Justification' கட்டுரையில் இந்திய அரசியல் இடதுகள் மேலாண்மை பெறுவது உறுதி என்கிற நம்பிக்கையை அவர் தெரிவித்திருந்தார். Forward Block is to the Left Movement what the Gandhites are to the Right Movement என அவர் நியாயப்படுத்தியிருந்தார். காங்கிரஸ் தரும் தேக்க நிலையை பா.பி தான் உடைக்கிறது. அரசியல் சட்டவாதம் எனத் தேங்காமல் புரட்சிகர மனப்பான்மை வளர பார்வார்ட்

பிளாக் செயல் படுகிறது என்றார். கீழ்கண்ட 8 அம்சங்களுக்கு FB பாடுபடும் என்றார்.

1. Complete National Independence- uncompromising anti imperialism
2. A thoroughly modern Socialist State
3. Scientific large scale production for economic regeneration
4. Social ownership of production as well distribution
5. Freedom for religious worship
6. Equal Rights for every Individual
7. Linguistic cultural autonomy for all sections of the community
8. Application of principles of equality and social justice in building up New order in Free India

முழுவிடுதலை, நவீன சோசலிச அரசு, விஞ்ஞானரீதியான பேரளவு உற்பத்திமுறை, சமூக உடைமை மற்றும் விநியோகம், வழிபாட்டு சுதந்திரம், சம உரிமை, மொழி கலாச்சார சுயத்தன்மை காத்தல், புதிய விடுதலை இந்தியாவில் சமத்துவ சமூக நீதி கோட்பாடுகள் என்பனவே அவர் முன்மொழிந்த 8 அம்சங்கள்.

நேதாஜி காந்தியுடன் நீண்ட உரையாடல் ஒன்றை 1940 ஜூனில் மேற்கொண்டார். உடன் Passive Resistance அவசியம் என வற்புறுத்தினார். காந்தி அமைதி காத்ததாக நேதாஜி பதிவு செல்கிறது. உங்கள் முயற்சி வெற்றி பெற்றால் அதை பாராட்டும் முதல் நபராக நான் இருப்பேன் என காந்திஜி தெரிவிக்க தவறவில்லை.

ஜின்னா, சாவர்க்கர் ஆகியவர்களை சந்தித்து நேதாஜி உரையாடினார். காங்கிரசுடன் போவது என்பதை ஜின்னா விரும்பவில்லை. பாகிஸ்தான் என சொல்லிவந்தார். நேதாஜி ஜின்னா பிரதம அமைச்சராக ஆகலாம் என்றார். சாவர்க்கரோ இந்துக்களை மாவீரர்கள் ஆக்குவது எப்படி என பேசிவந்தார். நேதாஜி இச்சந்திப்புகள் குறித்து இவ்வாறு எழுதினார்.

" From these interviews, the writer (Nethaji) was forced to the conclusion that nothing could be expected from either the Muslim League or the Hindu Mahasabha"

முஸ்லீம் லீகிடமிருந்தோ இந்து மகாசபாவிடமிருந்து எதிர்பார்க்க ஏதுமில்லை என்கிற முடிவிற்கே அவர் வந்தார். எம் என் ராய் குறித்தும் தனது ஏமாற்றத்தை நேதாஜி வெளிப்படுத்தினார். " The Govt also exploited to the fullest extent such agents, as the erstwhile Communist leader, M N Roy, who were prepared to sell themselves to Britain". என் என் ராய் போன்ற கம்யூனிஸ்ட் தலைவர்கள் தங்களை பிரிட்டனிடம் விற்றுவிட தயாராக இருந்தனர் என்கிற கடும் விமர்சனம் அவரிடமிருந்து வெளிப்பட்டது.

பிரிட்டனின் அழிவில் விடுதலை என்பது சத்தியாக்கிரகமல்ல என்றார் காந்தி . நேருவும் பிரிட்டன் நெருக்கடியில் ஒத்துழையாமை என்பதை ஏற்பதற்கில்லை என 1940 மே மாதம் தெரிவித்தார். ஆனால் காங்கிரஸ் தலைவர்களும் காந்திஜியும் ’திரள் போராட்டம்’ இல்லையென்றாலும் எதிர்ப்பு என்ற நிலை எடுத்தனர். காங்கிரஸ் அமைச்சர்கள் போராட்டத்தில் பங்கேற்றனர். பிரிட்டனால் 11 முறை முன்பே கைது செய்யப்பட்ட நேதாஜி இம்முறையும் கைதானார்.

1942 ல் பிரிட்டிஷ் காந்தியையும் அச்சுநாடுகளுக்கு (ஜப்பான் உள்ளிட்ட) ஏஜெண்ட் என முத்திரை குத்தியது. அப்போது காந்தி பேசிவந்தது ஏறக்குறைய நேதாஜி பார்வார்ட் பிளாக் மூலம் சொல்லி வந்த நிலைப்பாட்டை ஒத்திருந்ததாக நேதாஜி உரிமை கோருகிறார். நேருவைவிட காந்தி எதார்த்தமாக இருப்பவர் என்ற கருத்து நேதாஜியிடம் இருந்தது. ஜூலை 14 1942 அன்று காங்கிரஸ் செயற்குழு வார்தாவில் கூடி Britain's rule in India must end immediately என்றது. இப்போதே இங்கேயே விடுதலை (Independence here and now) என நேரு முழங்கினார்.

பம்பாயில் கூடிய காங்கிரஸ் 1942 ஆகஸ்ட் 8ல் பெரும்பான்மை அடிப்படையில் செயற்குழு தீர்மானத்தை ஏற்று அறிவித்தது. ’இந்தியாவை விட்டு வெளியேறு தீர்மானம்’ என இது வரலாற்றில் புகழ் பெற்றது. காந்தி 90 நிமிடம் உரையாற்றினார். ஆகஸ்ட் 9 அன்று காலை அவர் கைது செய்யப்பட்டார். தனது செய்தியாக விடுதலை பெறுவோம் அன்றேல் மரணிப்போம் (we get our freedom or die) என அவர் அறிவித்தார். ராஜாஜி மற்றும் கம்யூனிஸ்ட்கள், இந்நிலைப்பாட்டை ஏற்கவில்லை- எதிர்த்தனர்.

III

Indian Student 1938 ஜனவரி-மார்ச் காலாண்டு இதழ் சுபாஷின் காங்கிரஸ் தலைமை பெரும் நம்பிக்கையை தருவதாகவும் நேருவிற்கு அடுத்து இந்திய இளைஞர்களை கவ்விப் பிடிக்கும் சக்தி சுபாஷ் என்றும் புகழாரம் சூட்டியது. இந்திய சுதந்திரத்தை அவர் அடைந்தே தீருவார் என்கிற நம்பிக்கையை உலகம் பெற்றுள்ளதாகவும் அவ்விதழ் தெரிவித்தது.

ஆகஸ்ட் 1938 கணசக்தி வங்க மாத இதழ் சுபாஷ் காங்கிரஸ் தலைமை ஏற்றது வழக்கமாக மற்றவருக்கு சொல்வது போல் காந்தி ஆதரவு பெற்றதால் என கருதமுடியாது. மக்களின் பேராதரவால்தான் அவர் அப்பொறுப்பிற்கு வந்துள்ளார். காங்கிரசில் நடக்கும் வலது- இடது போராட்டத்தில் வலதை அவர் முறியடித்துள்ளார். இனிவரும் நாட்களில் காங்கிரசில் நடக்கப்போகும் போராட்டம் விடுதலையை விரும்பும் மக்களுக்கும் கான்ஸ்டிடூஷனலிஸ்ட் என அரசை நம்புவோருக்கும் இடையிலானதாக இருக்கும் என எழுதியது.

கம்யூனிஸ்ட் கட்சியின் நியுஏஜ் இதழ் ஏப்ரல் 1939ல் எதிர்பார்ப்பிற்கேற்ப சுபாஷ் செயல்பாடுகள் இல்லை என்கிற அதிருப்தியை வெளியிட்டது. கம்யூனிஸ்ட்களின் பல ஆலோசனைகள் நேதாஜிக்கு உவப்பாக இல்லை. இடது தேசிய சக்திகள் கொடுத்த அழுத்தம் காரணமாக அவர் இவ்வாறு நடக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கலாம் என நியுஏஜ் கருதியது.

பாசிச ஜெர்மனி எதிர்த்த பிரிட்டிஷ் யுத்தம் என தன் ஆதரவை எம் என் ராய் தெரிவித்தார். யுத்தத்தின் போக்கை பார்த்து நடுநிலைமை நியூட்ரல் நிலை என பேசத்துவங்கினார். காங்கிரஸ் அமைச்சரவை விலகல் என்பதையும் அவர் ஏற்கவில்லை. மக்களை காக்கும் பொறுப்பிலிருந்து காங்கிரஸ் அரசாங்கம் விலகக்கூடாது. அதே நேரத்தில் விடுதலைக்கான இறுதி போராட்டத்திற்கான வாய்ப்பாக யுத்த சூழலை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார். பலவீனப்படுத்தப்பட்ட அமைச்சரவையால் மக்களின் சிவிலுரிமைகளை காக்கமுடியாது என ராயிடம் காந்தி தெரிவித்துவிட்டார்.

காங்கிரஸ் சோசலிஸ்ட்கள் யுத்தத்திற்கு எதிரான தீர்மானங்களை நிறைவேற்றினர். யுத்த எதிர்ப்பு என்பதில் உறுதியாக இருக்க வேண்டும் என்றனர். அமைச்சரவை ராஜினாமா சரியானதே என்றனர். காந்தியடிகள் அறைகூவலுக்காக காத்திருப்பது- அவசியமெனில் சத்தியாக்கிரக போராட்ட அறைகூவலை சோசலிஸ்ட்கள் சார்பில் அறிவிப்பது என்ற முடிவையும் அவர்கள் எடுத்தனர். ஏகாதிபத்தியம் எதிர்த்த தேசிய போராட்டம் என்றார் ஜெயபிரகாஷ்.

யுத்த காலத்தில் நடுநிலை என்பது சரியல்ல, நெருக்கடியை பயன்படுத்திக்கொண்டு சூழலை புரட்சிகரமாக மாற்றவேண்டும். வேலைநிறுத்தங்கள், வரிகொடா இயக்கம், மக்கள் போராட்டங்களை காங்கிரஸ் கட்டுவதற்கு முன்வரவேண்டும். பார்வார்டுபிளாக், காங்கிரஸ் சோசலிஸ்ட்கள் தனியாக கொடுக்கும் அறைகூவல் மக்கள் ஈர்ப்பு போராட்டமாக அமையாது என்று கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஜோஷி அறிக்கை வெளியிட்டார். 1940-42 கம்யூனிஸ்ட் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

லெனின், முசோலினி இருவருமே கொண்டாடப்படக் கூடியவர்கள் என்ற கருத்திலிருந்தார் சுபாஷ்போஸ். சோசலிசம்- பாசிசம் ஒத்திசைவு உருவாக்கம் குறித்து பேசி வந்தார். செப்டம்பர் 8 1939 வார்தா கூட்டதிற்கு போஸ் அழைப்பாளராக வந்தார். காங்கிரஸ் அமைச்சரவை தானாக விலகியிருக்கக்கூடாது, கலைக்கப்பட வைத்திருக்கவேண்டும். அதுதான் சரியான போராட்ட தந்திரமாக இருந்திருக்கும் என்றார். யுத்த நெருக்கடி அற்புதமான விடுதலை போராட்ட வாய்ப்பை நல்கியிருக்கிறது. காங்கிரஸ் முடிவெடுக்காவிட்டால் பார்வர்ட்பிளாக் தனது பாதையை தேர்ந்தெடுக்கும் என்றார். கம்யூனிஸ்ட்கள் மற்றும் சோசலிஸ்ட்கள் சொல்லி வந்ததுபோலவே ஆட்சி அதிகாரம் வந்த பின்னர் அரசியல் அமைப்பு அசெம்பிளி அமையட்டும் என்பதில் நேதாஜி உடன்பட்டார்.

கம்யூனிஸ்ட்கள் போஸ் அணியினரை விமர்சித்தனர். இடது போல முழங்கினாலும் ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்கும் சீர்குலைவு வேலைகளை செய்கின்றனர் என்றனர். போருக்கு பின்னர் ஏகாதிபத்தியம் நீர்த்து வலுவிழக்கும் என்ற ராயின் கருத்தை போஸ்

விமர்சித்தார். இடதுகள் இவ்வாறு ஒருவரை தாக்கிக்கொள்ளும் சூழல் இருந்தது.

நேரு இடதுசாரிகளுடன் சேர்ந்து உடனடி சிவில் ஒத்துழையாமை என பேசினார். படேல், பிரசாத், ராஜாஜி ஒத்துழையாமைக்கு நாடு தயாராகவில்லை என்ற காந்தியின் கருத்தை பிரதிபலித்தனர். இந்த காலத்தில் முஸ்லீம் லீக் தனது பாகிஸ்தான் தனிநாடு கோரிக்கையை நிறைவேற்றி அதனை தீவிரப்படுத்திக் கொண்டிருந்தது.

தோழர் பரத்வாஜ் நியுஏஜ் மே 1939ல் எழுதிய கட்டுரையில் இடதுகள் சந்திக்க நேரும் ஆபத்தே அதன் 'அல்ட்ரா லெஃப்ட்' பகுதியிலிருந்து வறட்டுத்தனமான செயல் மற்றும் கோட்பாடுகளால் உருவாகிறது. ஏகாதிபத்தியம் இச்சூழலை சாதகமாக்கிக்கொண்டு தேச போராட்ட சக்திகளை பிரித்தாள்கிறது என தெரிவித்திருந்தார். விழிப்படைந்த புரட்சிகர தலைமை என்பதை காங்கிரசிற்குள் மந்திரக்கோலால் கொணரமுடியாது. Consistent theoretical and practical struggle against the mechanical theory of alternative leadership என்பதே தேவை. வெறும் புரட்சிகர உளறல்களாலோ, புரட்சி என கனவுலகில் மிதப்பதாலோ மாற்றுத்தலைமையை கட்டிவிடமுடியாது எனவும் பரத்வாஜ் எழுதியிருந்தார்.

தோழர் பி சி ஜோஷி பார்வார்ட் பிளாக் துவக்கம் முதலே flop ஆன கட்சியாகவே இருந்தது என எழுதினார். இரண்டாம் உலக யுத்த காலத்தில் காங்கிரசை விடுத்து தேசவிடுதலைப்போர் என நேதாஜி பேசிவருவது பிளவை மட்டுமே உருவாக்கும்.

The Communists argued that a national struggle today was a practical possibility only through the Congress. The Congress had to be led into action. To think otherwise was to be blind- Through struggles to a national struggle. This was our line என எதார்த்த நிலையை ஜோஷி எடுத்துரைந்திருந்தார். வலதுகள் உடைப்பதை எதிர்த்து போரிட்ட நாம் இடதுகள் உடைப்பதை சரி என சொல்லமுடியாது என விளக்கியிருந்தார் ஜோஷி.

சுபாஷ் அவர்களால் முன்வைக்கப்பட்ட முழக்கமான Britainís difficulty is Indiaís opportunity என்பதை கம்யூனிஸ்ட்கள் ஏற்கவில்லை. ராயிஸ்ட்களும் ஏற்கவில்லை. பூர்ஷ்வா தேசியவாதிகள் அது வலதாக இருந்தாலும்

இடதாக இருந்தாலும் அவர்கள் வீழ்ச்சியடைந்துள்ளனர். பார்வார்ட் பிளாக்கால் நல்ல தேசியகட்சியாகவும் முடியவில்லை- இடது கட்சியாகவும் இயங்கமுடியவில்லை. அது பிற்போக்கு சக்தியாக செயல்படுகிறது

We get behind Messiahs who are prepared to lead provided we follow them in their blindness. Such is the debacle to which bourgeois leadership, whether Right or Left, is reduced…Left nationalism, organised under the Forward Bloc, was born as an independent political force five months before the war. Five months of rapidly marching events after the outbreak have turned it into its very opposite and left it neither as genuine leftism nor good nationalism. It acts not as a progressive but as a retrogressive force. Its words are Left, its practice is anti-struggle, anti-unity, its aim remains settlement with imperialism என்கிற கடுமையான தாக்குதலை கம்யூனிஸ்ட்கள் நேதாஜி மற்றும் பார்வார்ட் பிளாக் மீது தொடுத்தார்கள்.

நேஷனல் பிரண்ட்டில் கட்டுரை எழுதிய தோழர் எஸ் வி காட்டே மாறிவரும் யுத்த சூழலுக்கேற்ப நிலைமைகளை கணித்து செயலாற்ற வேண்டிய அவசியம் பற்றி குறிப்பிட்டார். இந்திய விடுதலை போராட்டத்தை தனித்து பார்க்கக் கூடாது. பாசிசம் எதிர்த்த பெரும் போராட்டத்தின் பகுதியாக பார்க்கவேண்டும் என காட்டே எழுதியிருந்தார்.

Indiaís struggle for freedom cannot be viewed in isolation. It is a part of the great fight which the peoples of the world are beginning to wage against war and fascist aggression. The slogan ”Britainís difficulty is Indiaís opportunity” is no longer enough to indicate the interconnection of our national struggle with world politics. காட்டே கட்டுரை நேதாஜியின் நிலைப்பாட்டிற்கு மறுப்பாக வந்தது.

தோழர் பி சி ஜோஷி Forward to Freedom என்கிற கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். மாறியுள்ள யுத்த சூழலில் மக்கள் போராட்டம் மக்கள் யுத்த முழக்கத்தின்பாற்படியானதாக இருக்கவேண்டும் என குறிப்பிட்டிருந்தார். புதிய நிலைமைகளை கணித்து அதற்கேற்ப புதிய முழக்கங்களை தரும் நடைமுறை சார்ந்த ஒன்றே கம்யூனிஸ்ட் கட்சி என ஜோஷி எழுதினார்.

We are a practical party and in a new situation it is our task not only to evolve a new form of struggle for it, but also to advance new slogans appropriate to the new stage, suiting the new form of our national movement. The key slogan of our Party which guides all our practical political activity is : Make the Indian people play a peoples role in a Peoples' War.

தோழர் அதிகாரி 1943ல் யுத்தம் பற்றிய பரிசீலனை என்கிற கட்டுரை ஒன்றை எழுதினார். அதில் நேதாஜி மீது கடும் விமர்சனக் கணைகளை தொடுத்திருந்தார். 5th column- traitors- tojo agent போன்ற விமர்சனங்களும் தோழர் அதிகாரியால் தரப்பட்டிருந்தன. நேதாஜியின் படைப்பிரிவும் விடுதலைவீரர் பிரிவல்ல ஜப்பானின் பாசிச சக்திகளின் அடிமைகள் என்கிற தாக்குதலும் கொடுக்கப்பட்டிருந்தது.

ரொமய்ன் ரோலந்த் தனது நாட்குறிப்பில் கீழ்கண்டவற்றை நேதாஜி குறித்து எழுதியிருந்ததாக Gordon தெரிவிக்கிறார்.

"Chandra Bose to Berlin, received by Hitler. Once more he has made the plunge. At one time to the right, at another to the left. Moscow Berlin Tokyo.. these Bengalis violent, impulsive, never a politics of reason, they obey the somersaults of passions"

1942 ஜூன் 12ல் அச்சுநாடுகள் பிரிட்டனை தரைமட்டமாக்கினால் இந்திய சுதந்திரத்திற்கு உதவியாக இருக்கும் என நேதாஜி தெரிவித்தார். விடுதலைக்குப் பின்னர் வலுவான மய்ய அரசு, கட்டுப்பாடு மிகுந்த கட்சி என்பது உருவாகவேண்டும் என்றார். நேதாஜி ஜெர்மனியை விட்டு செல்லும்போது அவரது இராணுவத்தில் 3500 வீரர்கள் இருந்தனர் (டிசம்பர் 1942 எண்ணிக்கையில்). இவ்வீரர்களுக்கு ஜெர்மனியில் கமாண்டராக இருந்தவர் நாஜி வெறியர்.

நேதாஜி ஜப்பானின் பிரதமர் டோஜோவை ஜூன் 10,1943ல் சந்திக்கிறார். அடுத்த இருநாட்களில் ஜப்பான் நாடாளுமன்றத்தால் அவர் வரவேற்கப்படுகிறார். அங்கு இந்திய விடுதலைக்கு நாங்கள் துணையாக நிற்போம் என்கிற உறுதிமொழி கிடைக்கிறது. ஜூலை 19ல் சிவில் ஒத்துழையாமையை ஆயுதம் தாங்கிய போராட்டமாக மாற்றுவீர் என நேதாஜி அறைகூவல் விடுத்தார்.

மணிப்பூர் வழியே இந்தியாவை நெருங்கி நுழைந்துவிடலாம் என்கிற அவரது ஆலோசனையை ஜப்பான் தயக்கத்துடன் பார்த்தது. ஜப்பான்

ஒத்துழைப்பு முழுமையாக இருந்திருந்தால் சுபாஷின் ஐ என் ஏ இம்பாலை பிடித்திருக்கலாம் என்ற கருத்து அவரது ஆதரவாளர்களிடம் இருந்தது.

சிங்கப்பூர் சென்ற நேதாஜி அங்குதான் ஜூலை 4, 1943ல் சலோ டெல்லி முழக்கத்தை பெரும் பொதுக்கூட்டம் ஒன்றில் தருகிறார். அதே காதே தியேட்டர் பகுதியில் அவர் அக்டோபர் 21 1943ல் ஆசாத் ஹிந்த் அரசாங்கம் என அறிவிக்கிறார். அங்குதான் உணர்ச்சி வயப்பட்ட உறுதிமொழியையும் தருகிறார். தனது உடல் பொருள் ஆவி அனைத்தையும் இந்திய விடுதலைக்காக இழப்பேன். எனது இறுதிமூச்சு உள்ளவரை இந்த புனிதப்போரை கைவிடமாட்டேன். இந்தியாவின் 38 கோடி மக்களுக்கு என் வாழ்நாள் முழுதும் பெருந்தொண்டனாக செயல்படுவேன் என்றார்.

இந்தியாவில் ஐ என் ஏ வழக்கு விசாரணை பெரும் போராட்டங்களை ஏற்படுத்தியது. வீரர்கள் அனைவரையும் தண்டனைக்கு உள்ளாக்க வேண்டுமா- முக்கிய தலைமை பொறுப்பாளர்களை மட்டுமா என்பதில் பிரிட்டிஷ் அரசாங்க மட்டத்தில் விவாதம் நடந்து- சிலரை மட்டும் விசாரிப்பது என முடிவெடுத்தனர். இதை எதிர்த்து கல்கத்தாவில் மாணவர் இயக்கங்கள் எழுந்தன. அதில் கம்யூனிஸ்ட்களும் பங்கேற்றனர். ஆனால் நேதாஜியை சி பி அய் விமர்சித்து வந்தது என்கிற காரணத்தால் AISF தலைவர்கள் கூட்டங்களில் பேச அனுமதிக்காத நிகழ்வுகளும் நடந்தன. கீதாமுகர்ஜி போன்றவர்கள் இவ்வியக்கத்தில் முன்நின்றனர்.

பின்னர் நிலைமைகளில் மாற்றம் வரத்துவங்கின. அய் என் ஏ விசாரணை என்ற பெயரில் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட தாக்குதலை அனைவரும் கண்டிக்க துவங்கினர். கம்யூனிஸ்ட்களும் இப்போராட்டத்தில் முன்நின்றனர். குறிப்பாக கல்கத்தா எழுச்சியில் பெருமளவு பங்கேற்றனர். நேதாஜி குறித்த மதிப்பீடுகளில் அனைவருக்கும் நிதானம் ஏற்பட்டது. கசப்புகள் வெளியிடப்படுவது நிற்கத்துவங்கின.

விடுதலைக்கு முன்னால் இருந்த நான்கு இடது சக்திகள் மத்தியில் ஒத்துழைப்பும்- போட்டி- விமர்சன போராட்டங்களும் இருந்தன. தவறே செய்யாதவர் என எவரும் எவராலும் ஏற்கப்படவில்லை என்பதே

வரலாற்றை கூர்ந்து பார்க்கும்போது நமக்கு கிடைக்கும் செய்தியாக இருக்கிறது.

Ref:

1. subhas Chndra Bose and Indain Communist Movement - Cooperation and Conflict Gautam Chattopadhyay 1973

2. Subhas Chndra Bose, Indian Leftists and Communists- GautamChattopadhyay pph 1997

3. Nethaji and CPI by Sita Ram Goel



ஆசிரியரின் பிற நூல்கள்

1. மார்க்சியத் தடங்கள்
2. ரோசாலக்ஸம்பர்க்
3. போராளிகளின் குரல்
4. பகவத்கீதை பன்முகக் குரல்கள்
5. Trade Justice in Telecom
6. Selected Ides of O.P Gupta
7. ஹெகல் துவங்கி..
8. கார்க்கியின் அரசியல்வெளி
9. நவீன சிந்தனையின் இந்தியப் பன்முகங்கள்
10. காந்தியைக் கண்டுணர்தல்

சிறு வெளியீடுகள்

1. ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா
2. சிகாகோ மேதின தியாகிகள்
3. பகுனின் போராட்ட வாழ்வும் அனார்க்கிசமும்
4. விடுதலைக்கு முன்னர் எம் என் ராய்
5. பிரடரிக் எங்கெல்ஸ் நட்பின் சிகரம்

www.pattabiwrites.in